**கொவிட்- 19 விடுமுறையில் தினம் ஒரு பயிற்சி -22 - 27.04.2020.**

# புலமைக்கதிர் 5

புதிய பாடத்திட்டம் - 2020

**கணிதம்** **நேரம்:- 01.00மணி**

* சரியான விடையை எழுதுக?


1. | 4 | 6 |
   |---|---|
   | 0 | 2 |

   அடைப்பினுள் உள்ள இலக்கங்கள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண்ணிற்கும் மிகச் சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

   ..............................................................

2. தரப்பட்டுள்ள எண்ணிற்கு முன்னாலும் பின்னாலும் இடம் பெற வேண்டிய எண்களை எழுதுக?

   ........................ 2199, ........................

3. 

   கீழுள்ள உருவில் காணப்படும் சதுரங்களின் எண்ணிக்கை யாது?


   ........................................................


4. 1. அருகே உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியைப் பின்னத்தில் குறிப்பிடுக.

   ..........................................................................................

   2. நிழற்றப்படாத பகுதியை தசமத்தில் தருக?

   ..........................................................................................



5. 


   அருகிலுள்ள உருவில் எத்தனை சமச்சீர் கோடுகளை வரைய முடியும்

   ..............................................................

6. தரப்பட்ட எண் கோலத்தில் அடுத்து வரும் ஒரு எண்ணை எழுதுக.

   1. 5, 8, 11, 14 ..............................,
   2. 20, 16, 12, 8 ..........................,

7. இவ் எண் சட்டம் காட்டும் எண்ணை இலக்கத்தில் தருக.

   ..........................................................................................

8. 50 இனிப்புக்களை ஒரு பிள்ளைக்கு மூன்று வீதம் பகிர்ந்தால் மிகுதி எத்தனை?

   ..........................................................................................

9. 416 மாம்பழங்களில் $^2/_8$ பங்கு எத்தனை பழங்கள் ஆகும்.

   ..........................................................................................

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

10. கனவுரு ஒன்றின்

1. முகங்களின் எண்ணிக்கை ..........................................................................................

2. உச்சிகளின் எண்ணிக்கை ..........................................................................................

11. 5 லீற்றர் பாலை 500 மில்லிலீற்றர் அளவுடைய எத்தனை போத்தல்களில் ஊற்றலாம்?


..........................................................................................................................................................

12. காலை 8.30 ஆரம்பமான விளையாட்டுப் போட்டி பி.ப 1.00 மணிக்கு முடிவடைந்தது.

1. முடிவடைந்த நேரத்தை நியம நேரத்தில் எழுதுக. ..................................................

2. விளையாட்டுப்போட்டி நடைபெற்ற காலத்தை மணித்தியாலம், நிமிடங்களில் தருக. ..............................................................................................

13.. உருவில் உள்ள தகவல்களுக்கு ஏற்ப பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




1. வவுனியாவிலிருந்து கனகராயன்குளம் வரையான தூரம் எத்தனை km ஆகும்?

..........................................................................

2. 20km தூரமுடைய இரு நகரங்களும் எவை?

..........................................................................

14. **10kg** சீனியில் **7kg 250g** விற்கப்பட்டால் எஞ்சியிருக்கும் சீனியின் நிறையை **kg, g** இல் தருக.?

..............................................kg ..................................g

15. **10m** கம்பியிலிருந்து **5m 75cm** வெட்டி அகற்றப்பட்டால் மீதித்துண்டின் நீளம் யாது?

..............................................m ..................................cm

16. பிற்பகல் 3:45 மணிக்கு வவுனியாவில் இருந்து புறப்பட்ட புகைவண்டி 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் பயணம் செய்து கிளிநொச்சியை அடைந்தது. இப்புகைவண்டி கிளிநொச்சியை அடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.

..........................................................................................................................

17. 6 மாணவர்கள் தமக்கிடையே கை குலுக்கிக் கொண்டார்கள் எனில் அப்போது மொத்தமாக எத்தனை கை குலுக்கல்கள் இடம் பெற்றிருக்கும்.


..........................................................................................................................

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

18. உச்சிகள், விளிம்புகள், முகங்கள் ஆகியன சம எண்ணிக்கையில் காணப்படும் திண்ம உருக்கள் எவை?

.................................................................................................................................

19. கீழ்வரும் மாதிரிப் படத்தை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.





1. வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்வதகான கிட்டிய பாதையின் தூரத்தை கிலோ மீற்றர், மீற்றர் ஆகியவற்றில் தருக.

   .................................................................................................................................

2. மைதானம் கடைக்கு எத்திசையில் அமைந்துள்ளது?

   .................................................................................................

20. இவ்வுருவில் காணப்படும் செங்கோணத்தை விட கூடிய கோணங்களின் எண்ணிக்கை யாது?



.....................................................................................


21. கீழ்வரும் பற்றுச்சீட்டையைப் பூரணப்படுத்துக.

| அளவு | பொருள் | ஒன்றின் விலை | தொகை |
|---|---|---|---|
| 2kg | சீனி | 110.00 | ................ |
| 1kg | தேயிலை | 540.00 | 540.00 |
| ............ | சவரக்காரம் | 53.00 | 212.00 |
| | மொத்தம் | | .............. |

22. ஒரு தோட்டத்தில் தை மாதம் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை 825 ஆகும். மாசி மாதம் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை தை மாதம் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கையிலும் 165 அதிகமாகும். பங்குனி மாதம் பறிக்கப்பட்ட தேங்காய்கள் தை மாதம் பறிக்கப்பட்ட தேங்காய்களை விட 220 குறைவாகும். மூன்று மாதங்களிலும் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.................................................................................................................................

**23. தரம் 5 இல் கல்வி பயிலும் பெண்பிள்ளைகளின் எண்ணிக்கையை வகை குறிப்பதற்கு இவ் வரைபு வரையப்பட்டுள்ளது.**




1. தரம் 5 இல் மொத்தம் 50 பெண்பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். எனில் C வகுப்பில் கற்கும் பெண்பிள்ளைகளின் எண்ணிக்கையை வரைபில் குறித்துக் காட்டுக.

2. சமமான எண்ணிக்கையுடைய பெண்பிள்ளைகள் கற்கும் வகுப்புக்கள் எவை?

   ....................................................................................................................................

3. A வகுப்பிலிருந்து 10 பெண்பிள்ளைகள் B வகுப்பிற்கு மாற்றப்பட்டனர் எனில் தற்போது எவ் வகுப்புகளில் சம எண்ணிக்கையான பெண் பிள்ளைகள் உள்ளனர்?

   ....................................................................................................................................

**24. கிழங்கு மூடையொன்றில் நிறை 22kg 300g ஆகும். அதில் 4kg 500g நிறையுள்ள கிழங்குகள் விற்கப்பட்டன எனின், மீதமுள்ள கிழங்குகளின் நிறை யாது?**

....................................................................................................................................

**25. 550, 373, 226 ஆகிய இலக்கங்களில் 6 ஆல் வகுக்கும் போது மீதியாக 4 வரும் இலக்கங்கள் எவை?**

....................................................................................................................................

**26. தற்போது சந்துருவின் வயது 13 ஆண்டுகளும் 6 மாதங்களும் பிந்துவின் வயது 9 ஆண்டுகளும் 9 மாதங்களும் ஆகும். இருவரது வயதுகளின் கூட்டுத்தொகையைக் காண்க.**

....................................................................................................................................

**27. ரூபாய் 75.00 விலையுள்ள கணிதப் பெட்டியொன்றையும் ரூபாய் 37.50 விலையுள்ள பயிற்சிப் புத்தகத்தையும் வாங்குவதற்கு என்னிடம் ரூபாய் 100.00 உள்ளது. மேலும் தேவையான பணம் எவ்வளவு?**

....................................................................................................................................

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---